பெயர் : முனைவர் சு.பூங்கொடி

துறை : தமிழ்த்துறை

பாடம் : தமிழர் மானிடவியல்

அலகு : 2

ஆண்டு : முதுகலை முதலாம் ஆண்டு

பருவம் : இரண்டாம் பருவம்

Subject code : 18MTA24C - U2

**சமூக அமைப்பு**

- சமூக வாழ்வென்பது ஓர் ஒருங்கிணைந்த கட்டுக்கோப்பான அமைப்பைக் கொண்டது என்ற அணுகுமுறையானது இங்கிலாந்து சமூக மானிடவியலில் 1920கள் முதல் 1950கள் வரை மிக முக்கியமானதாக நிலவி வந்தது. மாலினோவ்ஸ்கியும், ராட்கிளிஃப்பிரௌனும் சமூக அமைப்பு என்னும் கருத்தாக்கத்தைப் பயன்படுத்தி சமூகத்தில் குழுக்கள் எவ்வாறு உருவாகி இயங்குகின்றன என்றும், மக்களின் நடத்தை முறைகளை ஒழுங்கமைக்கும் விதிமுறைகள் என்னென்ன என்றும், வெவ்வேறு குழுவினர் ஒருவரோடு ஒருவர் எவ்வாறு தொடர்பு கொள்கின்றனர் என்றும், அவ்வகைக் குழுக்களின் செயல்பாடுகள் என்னென்ன என்றும் அறிந்து கொள்ள முற்பட்டனர் இந்த வகையில், கேலி உறவு, தவிர்ப்பு உறவு, பேறுகாலத் தனிமை, சேய்வழி அழைத்தல் அழைத்தல் ஆகிய நடத்தை முறைகள் சமூக அமைப்போடு பொருந்தி நிற்பதை மிக நுட்பமாக ஆராய்ந்தனர்.

  கேலி , தவிர்ப்பு உறவுகள்
- ராட்கிளிஃப் ப்ரவுன் இதனை ஆராய்ந்தார்.அமெரிக்க இந்தியர்களான குரோ இந்தியர்களிடம் ராபர்ட் கண்டறிந்த இவ்வகை உறவு ஒருவர் அவரது மனைவியின் தங்கையை எந்த அளவு வேண்டுமானாலும் உரிமையுடன் கேலி செய்யலாம் என்பதாக அமைகின்றது
- தக்கதவிர்ப்பு உறவென்பது கேலி உறவுக்கு நேர்மாறானது. இத்தகு உறவில் ஒருவருக்கொருவர் மிகுந்த மரியாதை காட்டுவர் நேருக்கு நேர் பழகுவதில் தயக்கம் காட்டுவர். மாமியார் மருமகன் உறவு ஒரு தவிர்ப்பு உறவாகும்

**பேருகால தனிமை**

- மனைவியின் பெயர் காலத்தில் கணவன் மேற்கொள்ளும் போலியான பாவனை மனைவி படும் துன்பங்களை போன்றே கணவனும் அவள் உடனிருந்து துன்பங்களை அனுபவிப்பது ஆகும். அனைத்து வேலைகளையும் விட்டொழித்து அருகிலேயே தனிமைப்பட்டு கொண்டும் குறைந்த உணவு உட்கொண்டும் பிரசவத்திற்கு ஏற்ற சுவை மாறுபட்ட பத்திய உணவை உட்கொண்டு மனைவிக்கு ஏற்படும் உடல் வலி தனக்கும் ஏற்படுவது போல் பாவனை செய்து கொண்டும் முடங்கிக் கொண்டும் இருப்பதாகும்.

- இவ்வழக்கம் 1. வட கிழக்குத் தென்னமெரிக்கா 2. வட அமெரிக்க பீடபூமி 3. கிழக்கு ஆசியா 4. ஸ்பெயின் பிரான்ஸ் இடையேயுள்ள பைரோனீஸ் மலைப்பகுதிகள் ஆகிய நான்கு பகுதிகளில் நிலவுகிறது.
- தாய்வழிச் சமூகம் அளிக்கப்பட்டு தந்தைவழிச் சமூகம் கால்கொண்டு சூழலில் தந்தையின் அடையாளத்தையும் முக்கியத்துவத்தையும் உணர்த்தும் பொருட்டு பேறுகால தனிமை ஏற்பட்டது என்பார் டைலர்.

**சேய்வழி அழைத்தல்**

- குழந்தைகள் பெயரை முன்வைத்து குழந்தையின் பெற்றோரை தந்தையை அழைத்தல் எனப்படும் சமூகத்தில் உறவு முறையின் ஒரு பகுதியாக இம்முறை நிலை பெற்று வந்துள்ளது.
- தமிழகம் உள்ளிட்ட தென்னிந்தியாவின் ஊரகப் பகுதிகளிலும் தாய்வழிச் சமூகத்தின் எச்சங்கள் காணப்படுகின்றன தாய்வழிச் சமூகத்தில் மருமகன் ஒரு இரண்டாம் நிலை உறவினர் ஆகவே கருதப்பட்டான் அக்குடும்பத்தின் மருமகனைக் குறிப்பிட்டு கூற முற்பட்டபோது இக்குழந்தைகளின் தந்தை என்றே குறிப்பிட்டனர்.
- சங்க இலக்கியங்களில் ஐயை தந்தை (அகம் 6 )அகுதை தந்தை (அகம் 96) சேந்தன் தந்தை, இளையோர் தந்தை, இயினன் தந்தை, மடந்தையர் தந்தை, புதல்வர் தந்தை, நல்லோள் தந்தை, கொடிச்சியர் தந்தை போன்ற வழக்குகள் செய்முறை வழக்கத்தில் இருந்ததைச் சுட்டுகின்றன.

**திருமண முறைகள்**

- பண்பாட்டின் உள் அமைப்புகளுள் ஒன்றான திருமணத்தின் வழி சமூகத்தின் அமைப்பை கட்டுமானத்தை அறியும் சிந்தனையைத் தொடங்கியவர் மிகவும் புகழ்பெற்ற பிரெஞ்சு மானுடவியலார் கிளாட் லெவி ஸ்ட்ராஸ் ஆவார்.
- உன் தழுவிய நிலையில் தந்தைவழிச் சமுதாயங்களின் திருமணம் என்பது பெண் எடுத்தலைக் குறிக்கும். தாய்வழிச் சமுதாயங்களில் இதற்கு மாறாக மணமகன் பெறுதலைக் குறிக்கும்.
- திருமணம் குறித்த லெவி ஸ்ட்ராஸ் இன் அமைப்பியல் விளக்கம் இயற்கை பண்பாடு என்னும் அமைப்பு நிலையிலிருந்து தொடங்குகிறது மானிட பண்பாட்டுப் பண்பாட்டு படிமலர்ச்சி மில் ஒருவர் யார் யாருடன் மன உறவு கொள்ளக்கூடாது என்று ஏற்படுத்திக்கொண்ட வரையறை ஆனது அவர்கள் இயற்கையின் தன்மையிலிருந்து பண்பாட்டின் தன்மைக்கே அடி எடுத்து வைப்பதை குறிக்கும் ஒரு முதன்மையான அளவுகோலாகும். கொண்டு கொடுத்தல் என்ற ஒரு பரிவர்த்தனை முறைக்கு உட்படுத்தியது.

- தாய்வழி முறை மனம்-தந்தை வழி முறை மணம்-இரு வழி முறை மணம் இதில் அமைகின்றன.
- பண்பாட்டுக் கோலங்கள்
- பண்பாட்டின் தனித்தன்மைகளை விளக்குவதில் சில மாணவர்கள் மிகவும் கருத்து என்று ஆராய்ந்தனர் இத்தகு ஆய்வானது பண்பாட்டை அதிஉயிம் அல்லது உயிர் உயிரத் துவம் எ மனிதனின் ன்று குறிப்பிட்டதிலிருந்து மிகவும் வலுவடைந்தது.
- மக்கள் இழப்பதன் மூலம் அந்த இயக்கத்தில் இருந்து வெளியேறுகிறார்கள் பிறப்பும் இறப்பும் நிகழ்ந்து கொண்டிருப்பினும் சமூகம் என்பதுதொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கும் ஒரு தனி உயிரியை போன் சமூகத்தின் உயிர்ப்புத்தன்மை தனி கட்டுப்பாட்டில் இல்லாததால் பண்பாட்டை க்ரோபர் அதி உயிரத்துவம் கொண்டது. என்கிறார்
- இவ்வகையான தன்மையைப் பெற்ற பண்பாடுகள் ஒவ்வொன்றும் எவ்வகையான உருவத்தை அல்லது ஒஒழுங்கமைப்பைப்பெற்றுள்ளன என்பதை விளக்குவதில் பல கருத்துகள் வெளியாயின அவையே அமைப்பு ஒழுங்குக் கொள்கை எனப் பொதுவாக வழங்கப்பெறும்.
- பண்பாட்டுத்தோரணி என்பது பண்பாட்டின் உள் ஒழுங்கின் கட்டுமானத்தை வெளிப்படும் தோற்றம் முகம் உருவம் என்று பொருள் கொள்ளலாம் என்பர் குரோபர்
- பண்பியல்புகள் கூட்டுத் தன்மை தொடர்ச்சி உள்ளடக்கமும் வடிவமும் என்ற நான்கு அடிப்படையான முகங்களைக் கொண்டு பண்பாடு கொண்டிருக்கிறது.

**செயற்பாட்டியம்**

- உயிரியலில் அமைப்பு செயல் பற்றிய கருத்துகள் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே வலுப்பெற்று விட்டன அப்போது பேசப்பட்ட இக்கருத்துக்களைச் செயற்பாட்டியம் சார்ந்த சிந்தனைக்கு அடிப்படையாக அமைந்தன
- செய்ய பாட்டியம் என்பது மானிடவியல் உயிரியல் நடத்தைசார் அறிவியல்கள் இயற்பியல் சார் அறிவியல்கள் முதலான துறைகளில் முதன்மையாக பேசப்படும் ஒரு கோட்பாடாகும் அவற்றுடன் சமகால கட்டிட கலையிலும் உயிரினங்களுக்கு பொருத்தப்படும் மருத்துவ கருவிகள் மனிதர்கள் பயன்படுத்தும் பொருள்கள் முதலானவற்றை வடிவமைக்கும் பொறியியல் துறையிலும் இக்கோட்பாடு சிறப்பிடம் பெற்றுள்ளது.

- செயற்பாட்டையும் ஆனது பண்பாட்டை முழுமையாக புரிந்துகொள்வதற்கும் விளக்குவதற்கும் ஏற்பட்ட அணுகுமுறை இது பண்பாட்டை மாயை என்னும் உருவத்தில் இருந்து விடுவித்து அதன் செயல்பாடுகளின் அடிப்படையில் அலசி ஆராய்கிறது.

**அமைப்பியம்**

- பண்பாடு என்னும் முழுமைக்கும் எண்ணற்ற கூறுகள் ஒன்றியம் ஆகி செயல்படுகின்றன என்ற செயற்பாட்டையும் கருத்துக்கு மாறாக பண்பாடு ஆனது மனம் சார்ந்த அமைப்பு விதிகள் தோன்றுகிறது இது அமைப்பியம் என்று பெயர் பெற்றது மானிடவியலில் அமைப்பை முன்மொழிந்தவர் பிரெஞ்சு மானுடவியலர் கிளாட் லெவிஸ்ட்ராஸ் ஆவார்.

**எதிர் அமைப்பியம்**

- அமைப்பியம் ஆனது ஆராய போகும் மொழி பண்பாடு நிகழ்வு முழுமை ஒழுங்கு அல்லது எது ஒன்றிலும் பொதிந்துள்ள அமைப்பை விளக்குவதாகும் அமைப்பை இனங்கண்டு விளக்கும் பல முறைகளில் எதிரிணை என்பது ஓர் அடிப்படை எளிய முறையாகும் அமைப்பின் ஒரு பகுதியாக விளங்கும் இந்த எதிர்வினைகளை எடுத்துக்காட்டு கருப்பு-வெள்ளை நாடு காடு சொர்க்கம் நரகம் தூய்மை தீட்டு சக்தி சிவன் நல்லது கெட்டது போன்றவை மையப்படுத்தி அமைப்பின் கட்டுமானத்தை அழிவது என்பது தமிழ்ச்சூழலில் ஓரளவுக்கு அறிமுகமான இப் பின்புலத்தோடு எதிர் அமைப்பு எடை அறிமுகப்படுத்திக் கொள்வது எளிது.
- ஐபிஎம் ஆனது ஒரு நிகழ்வை அல்லது ஒழுங்கை எதிர் நினைவுகளாக கொள்ளாமல் முழுமையில் ஒரு பகுதியை அமைப்பு என்றும் மற்றொன்றை எதிர் அமைப்பு என்றும் எடுத்துக்கொண்டு அமைப்பை எதிர் அமைப்பு வாயிலாக புரிந்து கொள்ளும் அணுகுமுறையை முன்வைக்கிறது
- விக்டர் டர்னர் எதிர் அமைப்,பியத்தை 1.மீவியல் கருத்தாக்கம் 2, மீ சமூகக் கருத்தாக்கம் 3, விளிம்புக் கருத்தாக்கம் 4 யாத்திரைக் கருத்தாக்கம் என்ற நான்கு வகைகளில் விளக்குகிறார்.

**மந்திரம்**

- மந்திரம் குறித்து விரிவாக ஆராய்ந்த பிரேசர் மனிதனின் சிந்தனை முறையானது மந்திரம் சமயம் அறிவியல் ஆகிய

மூன்று முக்கிய பெரும் கட்டங்களாக வளர்ச்சி அடைந்துள்ளது என்று விரிவான தரவுகள் மூலம் தங்க கிளை என்னும் நூலில் விளக்கியுள்ளார் தொன்மைத் சமயத்தில் மந்திரம் ஒரு பிரிக்க இயலாத கூறாகும் இது அறிவியல் தோன்றுவதற்கு முந்தைய கலையாகும்.

இனி மந்திரத்திற்கும் சமயத்திற்குமான சில முக்கிய வேறுபாடுகளைக் காண்போம்:

| மந்திரம் | சமயம் |
|---|---|
| 1. போலி அறிவியல் (pseudo-science) தன்மை கொண்டது. | நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. |
| 2. போலியான காரண-காரிய உறவை அடிப்படையாகக் கொண்டது. | நம்பிக்கை அடிப்படையிலான காரண-காரிய விளக்கங் கொண்டது. |
| 3. கட்டாயத்தின் பேரில் நிகழ்த்தப்படுவது | உண்மையான பற்றுதலினால் நிகழ்வது. |
| 4. ஆவிகளை வினைபுரியச் செய்து நிவர்த்தை வேண்டுதல். | பணிந்து குறையுரைத்து நிவர்த்தை செயல்படுத்தப்படுவது |
| 5. அச்சம், திகில் கொண்டது; பேரச்சம், கடும் விளைவு, பயங்கரம் சார்ந்தது. | நன்மை மட்டுமே விளையக் கூடியது. |
| 6. மந்திரத்தில் நன்மந்திரம் தீய மந்திரம் இரண்டுமுண்டு | நன்மை, தீமை என்னும் இரட்டை நிலை இல்லை. பணிந்து வணங்கினால் நன்மை மட்டுமே ஏற்படும். |
| 7. இரகசியமாகச் செய்யப் படுவது. | இரகசியம் ஏதுமில்லை அனைவரின் முன்னிலையில் செய்யப்படுவது. |
| 8. மந்திரவாதி, ஏவல், வினை செய்பவர்களால் செய்யப்படுவது. மேற்கூறிய தனிமனித முயற்சியால் செய்யப்படுவது. | பூசகர் என்னும் சமூகத்தவரால் செய்யப்படுவது. |
| 9. மேற்கூறிய தனிமனித மாந்தரீகர்கள் அச்சத்திற்கு உரியவர்கள் | பூசகர்கள் அச்சத்திற்கு அப்பாற்பட்டவர்கள்; அன்புகாட்டுபவர்கள். |
| 10. மிகத் தொன்மையானது. | மந்திர ஆற்றலுக்குப் பிந்தையது. |

தமிழர்களின் சமய நம்பிக்கை இன்றும் இடைப்பட்ட நிலையிலேயே உள்ளது ஆவி வழிபாடு பல கடவுள் வழிபாடு ஒரு கடவுள் வழிபாடு என்ற 3 படி மலர்ச்சியில் பல கடவுள் வழிபாட்டை தமிழர்கள் கொண்டுள்ளார்கள் மேலும் இதில் இரண்டு அடிப்படையான போக்குகள் உண்டு ஒன்று வைதீக நெறி மற்றொன்று நாட்டார் நெறி வெகுசன மக்களின் சமய நம்பிக்கையில் தாந்திரீகம் ஒரு முக்கிய கூறாக உள்ளது தாந்திரீகத்தில் மதுவும் பெண் தெய்வங்களும் இன்றியமையாதன வைதிக நெறியின் செல்வாக்கின் காரணமாக சமஸ்கிருதம் ஆட்கள் ஏற்பட்டு மதுவுக்கு பதிலாக பால் அந்த இடத்தை பெற்றுள்ளது மதுவின் எச்சமாகவே பால் இடம் பெறுகிறது எனலாம் மந்திரத்தின் தன்மைகளை அறிவதற்கு சடங்குகளை நோக்கவேண்டும் பெரும்பாலும் சடங்குகள் வாயிலாகவே மந்திரம் செயல்படுத்தப்படுகிறது இது அந்தந்த சமூகத்தின் சமய நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது.

**சமயத்தின் தோற்றம்**

- சமயம் முதன்முதலில் எவ்வாறு தோன்றியது என்று அறுதியிட்டுக் கூற இயலாத நிலையே உள்ளது எனினும் தொல்லியலார் 70 ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழமையுடைய வாழ்ந்த பகுதிகளில் கிடைத்த பொருட்களைக் கொண்டு சில ஊகங்களை தர்க்கரீதியாக மீட் உருவாக்கியுள்ளனர் மேற்கு ஐரோப்பாவில் கடை காலகட்டத்தில் வாழ்ந்த ரோமன் மாநிலங்களின் கிடைத்த பொருட்களை கொண்டு மக்களின் சமய நம்பிக்கைகளை உருவாக்கியுள்ளனர் இதன்படி பார்த்தால் 70,000=100000ஆண்டுகளுக்கு முன்னரே மனித சமுதாயத்தில் சமய நம்பிக்கை தோன்றிவிட்டது உலக பண்பாடுகளில் சமயம் நிலைபெற்றுள்ளது 1,மனித எண்ணம் சார்ந்தது 2,உணர்வு சசார்ந்தது3,சமூகம் சார்ந்தது என்ற மூன்று வகையில் அணுகுமுறைகள் அமைகின்றன. எட்வார்ட்டைலர், ஜேம்ஸ் சார்ஜ் பிரேசர், ராபர்ட் லோவி, மாலினோவ்ஸ்கி, சிக்மன்ட் ப்ராய்ட், விக்டர் டர்னர், போன்றோர் ஆய்வு செய்த அறிஞர்களாவர்.
- இவர் இவர்கள் முன்வைத்த முக்கிய கோட்பாடுகள்
- ஆவி வழிபாடு 2. உயிர்ப்பாற்றல் வழிபாடு3. இயற்கை வழிபாடு 4. குலக்குறி வழிபாடு 5. போலியுரு வழிபாடு6. முன்னோர் வழிபாடு என்பனவாகும்.